செயலாளர், மதுரை விற்பனைக்குழு, மதுரை அவர்களின் செயல்முறைஆணை

பிறப்பிப்பவர் திரு.த.காமராஜ் எம்.எஸ்ஸி(விவ.,)

அ1/2082/2018 நாள் .11.2018.

பொருள் நேரடி நியமனம் – தமிழ்நாடு அமைச்சுப்பணி தொகுதி IVன்கீழ் தமிழ்நாடு அரசு பணியாளர் தேர்வாணையத்தால் 2015–16 நடத்தப்பட்ட தேர்வு – ச.விஜயபாஸ்கர், இளநிலை உதவியாளர் பதவிக்கு தேர்வு செய்தது -- பணி நியமனம் செய்து ஆணைகள் வழங்கியது – அன்னாரின் பணியினை பணிவரன் முறை செய்தும் மற்றும் தகுதிகாண் பருவத்தில் வைத்தும் ஆணையிடுதல் – தொடர்பாக.

பார்வை 1) அரசாணை எண் 978, வேளாண்மைத்துறை நாள் 23.05.1985

2) செயலாளர், அரசு பணியாளர் தேர்வாணையம், சென்னை அவர்களது மின்னஞ்சல் கடிதம் எண் 5820/PSDC/2015-16 நாள் 25.09.2017.

3) இவ்வலுவலக செயல்முறை ஆணை எண் அ1/2316/17 நாள்.06.10.17.

*********

ஆணைகள்

தமிழ்நாடு அரசுப்பணியாளர் தேர்வாணையத்தினால் தமிழ்நாடு அமைச்சுப்பணி விதிகளின் கீழ் தொகுதி IVக்கு 2015–16ல் நடத்தப்பட்ட தேர்வுகள் மூலம் இளநிலை உதவியாளர் பதவிக்கு பார்வை 2ல் கண்டுள்ளபடி தற்காலிகமாக தேர்வு செய்யப்பட்டு மதுரை விற்பனைக்குழுவிற்கு ஒதுக்கீடு செய்யப்பட்டு பார்வை 3ல் கண்டுள்ள செயல்முறை ஆணைகளின்படி பணி நியமனம் செய்யப்பட்ட திரு.ச.விஜயபாஸ்கர் அவர்களின் பணியினை பணியில் சேர்ந்த நாளான 12.10.17 மு.ப முதல் பணிவரண்முறை செய்து ஆணைகள் வழங்கப்படுகிறது.

மேலும் அன்னார் இளநிலை உதவியாளர் பதவியில் பணிவரன்முறை செய்யப்பட்ட நாளான 12.10.2017மு.ப முதல் அன்னாரை தமிழ்நாடு அமைச்சுபணி விதிகளின்கீழ் மூன்று ஆண்டு தொடர்பணிகளில் இரண்டு ஆண்டுகள் தகுதிகாண் பருவத்தில் வைத்தும் ஆணைகள் வழங்கப்படுகிறது.

Scanned with CamScanner